மக்கள்! ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 29 திங்கட்கிழமை (16-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 327

of Time Reader
hine 11/15 Pm. 11/55 Pm. 11.5
torial Staff Date-Tim

# மாதகலிலிருந்து முன்னேறும் இராணுவ முயற்சி முறியடிப்பு!

## வல்லையில் ஷெல்!

பருத்தித்துறை, ஒக். 16

வடமராட்சி நோக்கி நேற்று முன்தினம் நள்ளிரவு 11-30 மணியளவில் இரண்டு ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன. இவை வல்வெட்டித்துறை வண்ணாத்திமடம், மானாக்கானை ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன. ஒரு ஷெல்லினால் வீடு ஒன்று முற்றாகச் சேதமடைந்தது.

(உ-118-173)

## புலிகள் கடும் சமர் புரிந்து தடுத்து நிறுத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 16

மாதகல் பகுதியிலிருந்து முன்னேற ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று பெருத்த எடுப்பில் மேற்கொண்ட முயற்சியை விடுதலைப்புலிகள் கடும் சமர் புரிந்து தடுத்து நிறுத்தினர்.

நேற்று அதிகாலை அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டவாறு டாங்கிகள் மற்றும் கனரக யுத்த வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் இந்த முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டனர் என்றும் —

இதனை எதிர்த்து — படையினரின் அகோர ஷெல் தாக்குதல்களின் மத்தியிலும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வலிகாமம் மேற்குப் பகுதிகள் மீது நேற்று அகோர ஷெல் தாக்குதல்

### ஒருவர் பலி; ஆயிரக்கணக்கில் மக்கள் இடம்பெயர்வு

வலிகாமம் மேற்கு, ஒக். 16

நேற்று மாதகல் பகுதியில் முன்னேற முயன்ற ஸ்ரீலங்கா படையினர் வலிகாமம் மேற்கில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை முதல் மாலை வரை கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணம் இருந்தனர்.

சுழிபுரம் மத்தியில் விழுந்த ஷெல்லினால் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். மற்றும் மூவரும் ஷெல்லுக்குப் பலியானதாகக் கூறப்பட்டபோதிலும் அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

படையினரின் ஷெல் தாக்குதல்களினால் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

சுழிபுரம் கல்லைவேம்படி என்ற இடத்தில் விழுந்து வெடித்த ஷெல்லின் அதிர்ச்சியினால் அப்பகுதியைச் சேர்ந்த இராசதுரை (வயது 65) என்பவர் மரணமானார்.

சங்கானையில் விழுந்து வெடித்த ஷெல்லினால், அந்திரான்வாய்க்கால்வயல் பகுதியில் நின்ற நவரத்தினம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டொரு தினங்களில் பாண் தட்டுப்பாடு நீங்கும்

### ஆனால் 25 சதம் விலை கூடும்

யாழ்ப்பாணம், ஒக். 16

ஆயிரம் மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு நாளை கொழும்பிலிருந்து புறப்படும் "ஹபனா" கப்பல் நாளை மறுதினம் பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் உள்ள மா இறக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் பாணுக்குள்ள தட்டுப்பாடு நீங்கும்.

இக்கப்பலில் எடுத்து வரப்படும் மா முழுவதும் பேக்கரிகளுக்கே விநியோகிக்கப்படும் என்றும் —

மூன்று வாரங்களுக்கு பாண் தயாரிப்பதற்கு இது போதுமானதாக இருக்கும் என்றும் —

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் இக்கப்பலில் வரும் மாவில் தயாரிக்கப்படுகின்ற பாண் 6 ரூபா 25 சதத்துக்கு — தற்போதைய

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் உணவு நெருக்கடி: ஜெனிவா ஐ. நா. தூதரகம் ஆராய்வு

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி குறித்து ஜெனிவாவில் இயங்கும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மோசமடைந்துள்ள உணவு நெருக்கடியால் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து கொழும்பில் உள்ள அலுவலகம் ஊடாக ஜெனிவா அலுவலகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்த அமைப்பின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது விடயமாக ஜெனிவாவில் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது என்றும் —

விரைவில் கொழும்பு அலுவலக அதிகாரிகள் ஸ்ரீலங்கா அரச அதிகாரிகளுடன் இது பற்றி பேச்சு நடத்துவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## உடனடியாக போரை நிறுத்தி பேசுக! அங்கிலிக்கன் திருச்சபை கோருகிறது

யாழ்ப்பாணம், ஒக். 16

விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் உடனடியாக போர் நிறுத்தம் செய்து, பேச்சுவார்த்தை மேசைக்கு வர வேண்டும்.

இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்று அங்கிலிக்கன் திருச்சபையின் வருடாந்த மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த 3,4 ஆம் திகதிகளில் நடைபெற்ற இம் மாநாட்டில் இலங்கை முழுவதிலுமுள்ள அங்கிலிக்கன் திருச்சபையின் மதகுருமார்கள் கலந்து கொண்டனர்.

அங்கிலிக்கன் திருச்சபையில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் தனித்தனியே கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-4)

## "டப்பி" வடிவ பொருளை குத்திய சிறுவர்கள் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 16

தோட்டப்பகுதியில் கண்டெடுத்த சிறிய டப்பி போன்ற ஒரு பொருளை சிறுவர்கள் சிலர் குத்திப் பார்த்த போது அது வெடித்ததில் அவர்களில் மூவர் காயமடைந்தனர்.

இணுவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சண்முகம் சதீஸ்குமார் [வயது 13] என்ற சிறுவன் படுகாயமடைந்தான். மற்றும் இரு சிறுவர்கள் காயமுற்றனர்.

படுகாயமுற்ற சிறுவன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான்

(உ-13-15)

## யாழ். உணவு நிலை குறித்து இன்று கொழும்பில் மாநாடு

### சந்திரிகா கூட்டியுள்ளார்

கொழும்பு, ஒக். 16

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் கொழும்பில் இன்று உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். செயலக அதிகாரிகள், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், வடபகுதி எம். பிக்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொள்வுள்ளனர்.

இதற்கிடையில் —

யாழ். மக்களின் உடனடித் தேவைகளை கவனிக்கும்படி ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார் என கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது.

(உ-3)

## களுத்துறையில் கடைகளில் தீ!

கொழும்பு, ஒக். 16

களுத்துறை மாவட்டத்தில் நேற்று முன் தினம் இரவு 8 கடைகள் தீப்பற்றிக் கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

இதனால் 10 லட்சம் ரூபா இழப்பு ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டது.

களுத்துறை பொலிஸார் இது [illegible] ளனர்.

(எ)

## இராமேஸ்வரம் கடலில் 3 ஈழத்தமிழர் கைது!

இராமேஸ்வரத்துக்கு அருகே தனுஷ்கோடிப் பகுதியில் அதிவேக — கண்ணாடி இழை — படகில் சென்று கொண்டிருந்த மூன்று ஈழத்தமிழர்களை தமிழகக் காவல் படையினர் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

வானத்தில் இருந்து வேவு பார்த்து இவர்களின் படகை காவல்துறையினர் கண்டு பிடித்ததாக அறிவிக்கப்பட்டது.

தலைமன்னாரைச் சேர்ந்த பாஸ்கரன், எட்வேட் ஆகியோரும் மற்றுமொருவருமே கைது செய்யப்பட்டனர்.

இந்த மூவரும் மீனவர் என தெரிவித்ததையடுத்து பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இராமேஸ்வரத்தில் உள்ள மீனவர்களிடம் தாங்கள் இரவல் கொடுத்த வலைகளை எடுப்பதற்காக வந்ததாகவும் அவர்கள் தெரிவித்தனராம்.

## மட்டக்களப்பில் 3 படையினர் கண்ணிவெடிக்குப் பலி!

### அவர்கள் சென்ற டிராக்டர் சேதம்

நேற்றுப் பிற்பகல் மட்டக்களப்புக்கும் சித்தாண்டிக்கும் இடையில் படையினர் சென்ற டிராக்டர் ஒன்று கண்ணிவெடியில் சிக்கியதில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மற்றும் இரு படையினர் காயமடைந்தனர். டிராக்டரும் சேதமடைந்தது.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு இத்தகவலை வெளியிட்டது.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய செஞ்சிலுவை அதிகாரி புதனன்று யாழ். வருகிறார்

## புலிகள் பிரதிநிதிகளை சந்திப்பார்

யாழ்ப்பாணம், ஒக். 16

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கைப் பிரதி நிதியாக புதிதாக பதவியேற்றுள்ள (Peytrignet) ஜி. பிக்கிக்ஜோ நாளை மறுதினம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

இது வரை இலங்கை பிரதிநிதியாகப் பணியாற்றிய மார்க் கோ [...] அக்தரும் இவருடன் யாழ்ப்பாணம் வருவார்.

இலங்கை அடங்கியதான ஆசிய நாடுகளில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அடுத்த வருடம் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள், அதற்கான நிதி ஒதுக்கீடு ஆகியன குறித்து புதுடில்லியில் நடைபெறும் மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட பின்னர் இவர்கள், இருவரும் கொழும்பு வந்து அரச உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி விட்டு யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாணம் வரும் இவர்கள் இங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவர்.

ஓரிரு தினங்கள் இங்கு தங்கவுள்ள இவர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டு வரும் வேலைத் திட்டங்களை பார்வையிடுவர். (ஐ-8)

# தரமான பனம் பழ ஜாம் விரைவில் சந்தைக்கு வரும்!

யாழ்ப்பாணம், ஒக். 16

பனம் பழத்தைப் பயன்படுத்தி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உணவு பதனிடல் பகுதியின் கீழ் இயங்கும் "றோஸ்பிராண்ட்" இனிப்பு உற்பத்தி நிறுவனத்தினர் புதிய வகை "ஜாம்" ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட ஜாம்களின் தரத்துக்கு நிகராக இப் பனம்பழ ஜாம் அமைந்துள்ளதால் இதனைப் பெருமளவில் தயாரித்து மக்கள் பாவனைக்கு விநியோகிக்க உணவு பதனிடல் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இம் முயற்சியானது மக்களிடையே தமது பிரதான வளத்தைச் சிறப்பாகப் பயன்படுத்த உதவுவதோடு, உள்ளூர் உற்பத்தியை அதிகரிக்கவும் வழிவகை செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# பாதுகாப்பு நிதி பற்றிய கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாணம், ஒக். 16

தேசிய பாதுகாப்பு நிதி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை உரும்பராய் அன்னை பூபதி கலையரங்கில் நடைபெறவிருக்கிறது.

ஏழாலை மேற்கு, ஏழாலை தென் மேற்கு, ஏழாலை தெற்கு, ஏழாலை, ஏழாலை வடக்கு, ஏழாலை மத்தி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினை, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு, சுன்னாகம் வடக்கு, சுன்னாகம் தெற்கு, சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம் மத்தி, சுன்னாகம் மேற்கு, கந்தரோடை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த — இதுவரை தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒப்புதல் அளிக்காதவர்களை — இக் கலந்துரையாடலில் பங்குபற்றும்படி கேட்கப்பட்டுள்ளனர். (உ-3)


## கண்ணீர் அஞ்சலி

சுகாதார மகளிர் விவகார அமைச்சின்
ஆயுள்வேத மாகாணப் பணிப்பாளர்
வைத்திய கலாநிதி
பூ. உரோமகேசுவரன்
அவர்களின் அன்புமனைவி

### திருமதி. சரோஜினிதேவி

அவர்கள்

இறைபதம் எய்திய செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அநுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

- வட இலங்கை ஹோமியோபதி சங்கம்
- வட, இலங்கை அக்குபங்சர் சங்கம்

(39032)



## கண்ணீர் அஞ்சலி

திருமதி
### சரோஜினிதேவி உரோமகேசுவரன்
வைத்திய கலாநிதி பூ. உரோமகேசுவரன்

[ஆயுள்வேத மாகாணப் பணிப்பாளர்
சுகாதார மகளிர் விவகார அமைச்சு வடக்கு
கிழக்கு மாகாணம் திருமலை)

அவர்களின் அன்பு மனைவி இறைபதமடைந்த செய்தி கேட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரின் குடும்பத்தார்க்கு தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்]

உமாபதிஸ்ரீசங்கர்,
தலைவர்
ஸ்ரீலங்கா டி. ஏ. எம். மருத்துவர்கள்
அபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம்.

(39029)


# தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவு தவிர்க்க முடியாதது என்கிறார் சோ

புதுடில்லி, ஒக். 16

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான நிலை தமிழகத்தில் தவிர்க்க முடியாதது என "துக்ளக்" ஆசிரியர் சோ. ராமசாமி தெரிவித்துள்ளார்.

- வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

குடாநாட்டில் 'இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது பொதுமக்களின் அழிவுக்கே வழிவகுக்கும்.

இது தமிழ் நாட்டில் உள்ள தமிழ் மக்களின் பாதிப்பை ஏற்படுத்தும். அது இலங்கை அரசுக்கு எதிராகவும், தமிழீழ மக்களுக்கு ஆதரவாகவும் மாறும் போக்கை உருவாக்கும். விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் காவலர்கள் என்றதோற்றப்பாட்டையும் ஏற்படுத்தும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி குறிப்பிட்டது.

இதற்கிடையில் —

தமிழ் நாட்டின் இளைஞர் சமூகம் தமிழீழம் என்ற சொல்லுக்கும், அதற்காகப் போராடி வரும் விடுதலைப் புலிகளுக்கும் ஆதரவாகவே உள்ளனர் என ம.று மலர்ச்சி தி. மு. கவின் பொதுச் செயலாளர் வை கோபாலசாமி பி. பி. ஸி செய்தியாளர் ஜோர்ஜ் [...]னிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

## கோப்பாயில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 16

ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகள், குண்டு வீச்சுக்கள் மற்றும் ஷெல் தாக்குதல்களினால் எழுந்துள்ள பிரச்சினைகள் பற்றியும் இவ்வனர்த்தங்களுக்குமக்கள் எவ்வாறு முகம் கொடுப்பது என்பது பற்றியும் கலந்துரையாடுவதற்கு இன்று திங்கள் பிற்பகல் 3-00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் கோப்பாய் வட்டத்திற்குட்பட்ட அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளிலுமுள்ள ஊர்காப்புக்கழகங்கள், கிராமிய உற்பத்திக் குழுக்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஆலய பரிபாலன திருப்பணிச் சபைகள், மாதர் மன்றங்கள், கலை இலக்கிய மன்றங்கள், மொழி வளர்ச்சி மன்றங்கள் மற்றும் பொதுப்பணி மன்றங்கள் ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினர்களையும், பொதுநலன் விரும்பிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோப்பாய் வட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

## பருத்தித்துறை கோட்ட மாணவர்களுக்கு

பருத்தித்துறை, ஒக். 16

பருத்தித்துறைக் கல்விக் கோட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களை இன்று திங்கட்கிழமை முதல் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்குமாறு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பெற்றோர்களைக் கேட்டுள்ளார்.

பாடசாலைகளில் இயங்கிய அகதி முகாம்கள் யாவும் மூடப்பட்டுள்ளன. எனவே பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-118)

## இரண்டொரு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலையை விட இருமடங்கு பத்து சதம் கூடுதலான விலைக்கு — விற்கப்படும் என்றும் தெரிய வந்தது.

மாவின் விலை கிலோவுக்கு 90 சதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதை அடுத்தே பாணின் விலை 25 சதத்தால் கூட்டப்பட்டிருக்கிறது.

தன்னுடைய மனிதாபிமானப் பணிக்கு பயன்படுத்துகின்ற "ஹபரண", கப்பலை யாழ். குடாநாட்டின் அவசர தேவை கருதி இலவசமாக மா ஏற்றி வருவதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இந்தத் தடவை வழங்கியுள்ளது.

மாவை ஏற்றி வரும் கப்பலுக்குரிய கட்டணத்தையும் யாழ். செயலகம் செலுத்த வேண்டியிருப்பின் பாணின் விலையை 6 ரூபா 25சதத்தை விட மேலும் அதிகரிக்க வேண்[டி ...] [...] (உ-3)

## டிசம்பர் மாதத்தில்

# தமிழக உள்ளாட்சி தேர்தல்: 4 முனைப் போட்டி உறுதி

தமிழ்நாட்டில் நடைபெற இருக்கும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் என்று ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமியும் மார்க்சியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் என். சங்கரய்யாவும் கூட்டாக அறிவித்திருக்கிறார்கள்.

இதனையடுத்து தமிழ்நாட்டில் நான்கு முனைப் போட்டி உறுதியாகியிருக்கிறது.

தி.மு.க. தலைமையில் ஏழு கட்சிக் கூட்டணியும்—

காங்கிரஸ் கட்சி தலைமையில் 10 கட்சிகள் கூட்டணியும்—

ம.தி.மு.க. — கம்யூனிஸ்ட் கூட்டணியும்—

அ. தி. மு. க. தலைமையிலான கூட்டணியுமாக—

எதிர்வரும் டிசம்பர் 1, 2, 3 ஆம் திகதிகளில் நடைபெறும் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் நான்கு முனைப் போட்டி இடம்பெறவுள்ளது.

# சில்லையூர் செல்வராசன் கொழும்பில் காலமானார்

கொழும்பு, ஒக். 16

பிரபல கவிஞரும், எழுத்தாளரும், பத்திரிகையாளரும், கலைஞருமான சில்லையூர் செல்வராஜன் தமது 62ஆவது வயதில் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

இவர் "தான்தோன்றிக் கவிராயர்" என்ற பெயரில் புகழ்பெற்ற கவிஞராக விளங்கியவர்.

தமது 17ஆவது வயதிலேயே பத்திரிகையாளராகப் பணியாற்றத் தொடங்கி சுதந்திரன், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் கடமையாற்றினார்.

இவர் ஒரு சிறந்த நாடக எழுத்தாளரும், நாடக விமர்சகரும், நடிகரும் ஆவார். பல தமிழ், சிங்களப் படங்களிலும், தொலைக்காட்சிப் படங்களிலும் மட்டுமன்றி ஐந்துக்கு மேற்பட்ட ஹொலிவூட் திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.

இவர் ஒரு பாடகரும் ஆவார். "பல்கலை வேந்தர்" பட்டமும் பெற்றவர்.

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பல பிரபல நிகழ்ச்சிகளை நடத்திப் புகழ் பெற்றவர். விளம்பரத் துறையிலும் இவர் தமக்கென ஒரு தனியான பாணியை ஏற்படுத்தி இருந்தார்.

இவரது தமிழ்க் கவிதைகள் பல ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு 'பெங்குவின்' வெளியீடுகளில் பிரசுரிக்கப் பட்டுள்ளன.

இவ்வருடம் நடைபெற்ற ஆசியக் கவிதைப் பெருவிழாவில் கலந்துகொண்ட ஒரே பெரு தமிழ்க் கவிஞர் இவராவார். (அ)

# "நாழிகை"க்கு தடை விதிப்பு!

வடக்கு - கிழக்கு தொடர்பான சர்ச்சைக்குரிய கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளதை அடுத்து லண்டனில் இருந்து வெளிவரும் 'நாழிகை' என்ற தமிழ்ச் சஞ்சிகை இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சஞ்சிகையில் ஜூலை மாத இதழில் சர்ச்சைக்குரிய கட்டுரையும், படங்களும் வெளியாகியுள்ளதால் இந்தச் சஞ்சிகையை வெகுஜனத் தொடர்பு சாதன அமைச்சு தடை செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாலிங்கசிவம் (மாலி) இந்தப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து இப்பத்திரிகையை வெளியிட்டுவருகின்றார்.

# அவசர சந்திப்புகள்

யாழ்ப்பாணம், ஒக். 16

யாழ். கல்விக்கோட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்கள், பழைய மாணவர் சங்கத் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் ஆகியோருக்கான அவசர சந்திப்புக்கள் மூன்றை கொத்தணி அடிப்படையில் இன்று முதல் நடைபெறவிருக்கின்றன.

யாழ். மத்திய கல்லூரி கொத்தணி பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கான சந்திப்பு இன்று பிற்பகல் 12.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியிலும்—

வைத்தீஸ்வரக் கல்லூரி கொத்தணி பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கான சந்திப்பு நாளை பிற்பகல் 12.30 மணிக்கு வைத்தீஸ்வரக் கல்லூரியிலும்—

சென். சாள்ஸ் கொத்தணி பாடசாலைகளை சேர்ந்தவர்களுக்கான சந்திப்பு நாளை மறுதினம் பிற்பகல் 12.30 மணிக்கு சென். சாள்ஸ் ம.வி யிலும் — நடைபெறும். (உ-8)

★ ★ ★

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கான அவசர சந்திப்புக்கள் இன்று முதல் நடைபெறும் என்று கோட்டப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை கோட்டத்துக்கான சந்திப்பு இன்று பிற்பகல் 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியிலும்—

சண்டிலிப்பாய் கோட்டத்துக்கான சந்திப்பு நாளை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும்—

சங்கானை கோட்டத்துக்கான சந்திப்பு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியிலும் — நடைபெறவிருக்கின்றன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களுக்கு ஆடம்பரக் கார்கள்;

# பலகோடி ரூபா செலவில் இறக்குமதி

கொழும்பு, ஒக். 16

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாவனைக்காக அதி நவீன ஆடம்பர சொகுசு கார்களை அரசாங்கம் இறக்குமதி செய்துள்ளது.

ஒவ்வொன்றும் 13 லட்சம் ரூபா பெறுமதியான 73 ரெபோ டொயாட்டா லாண்ட் குருசேர்ஸ் கார்கள் வெளிநாட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 60 கார்கள் ஏற்கனவே கொழும்பு துறைமுகத்துக்கு வந்துசேர்ந்துள்ளன.

நவீன வசதிகள் கொண்ட இந்த ஆடம்பர கார்கள் எம். பிக்களின் பாவனைக்கு விரைவில் வழங்கப்பட உள்ளன.

இதேவேளை அரசியல்வாதிகளின் பாவனைக்கென 21 கோடி 60 லட்சம் ரூபா பெறுமதியான 82 நவீன பஜீரோ வாகனங்கள் பெறப்பட்டிருப்பதாக "ஐலண்ட்" பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த பஜீரோ வாகனங்கள் இரு வாரங்களுக்கு முன்னர் கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்த பஜீரோ வாகனங்களில் பெரும்பாலானவை ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் பாவனைக்கு வழங்கப்படவிருப்பதாகவும் 'ஐலண்ட்' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஐ. தே. க. ஆட்சிக் காலத்தில் அரசியல்வாதிகளுக்கு ஆடம்பரக் கார்கள் கொள்வனவு செய்யப்பட்டமைக்கு, பொ. ஐ. முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தவேளை கடும் கண்டனங்களைத் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. [ஒ-ஐ]

## குருநகரில் தேவாலயம் சேதம்

குருநகர் ஒக் 16

கடந்த வெள்ளிக்கிழமை மண்டதீவில் இருந்த இராணுவத்தினர் ஏவிய ஷெல்லினால் குருநகர் புனித ஆரோக்கிய நாதர் தேவாலயத்துக்கு சேதம் ஏற்பட்டது.

அன்றைய தினம் படையினர் ஏவிய ஷெல்கள் குருநகர் பகுதியில் பரவலாக விழுந்து வெடித்தன. அவற்றில் ஒரு ஷெல் ஆரோக்கிய நாதர் தேவாலய வளவிலும் விழுந்து வெடித்தது. இதனால் ஆலய ஜன்னல் ஒன்று பெயர்ந்து போனது. ஆலய கட்டடத்திற்கும் சிறு சேதம் ஏற்பட்டது. (எ-51]

# நிவாரண முத்திரை-பங்கீட்டு அட்டை விட்டு வந்தோருக்கு மாற்று ஏற்பாடு

### கோப்பாய் பிரதேச செயலர் அறிவிப்பு

கோப்பாய் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களில் அனேகர் தமது நிவாரண முத்திரைகள் பங்கீட்டு அட்டைகள் ஆகியவற்றை தம்முடன் எடுத்து வராத காரணத்தால் அத்தியாவசிய பொருள்களையும் நிவாரணங்களையும் பெற முடியாதுள்ளனர். சகல மக்களும் நிவாரணங்களையும் பங்கீட்டுப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யுமுகமாக பின்வரும் நடைமுறைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

1. இப்பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்டு அச்சுவேலி ப.நோ.கூ. சங்கத்தில் இணைக்கப்பட்ட சகல இடம்பெயர் நிவாரண முத்திரைகளும் ரத்துச் செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாக விசேட அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

2. பங்கீட்டு அட்டையைத் தவறவிட்டவர்களுக்கு பதில் அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

வறுமை நிவாரண முத்திரை மேலதிக முத்திரை ஆகியவற்றை இழந்தவர்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இடம்பெயர்ந்தவர்களில் பெரும்பாலானோர் தென்மராட்சிப் பகுதியில் வசிப்பதால் அவர்களின் வசதி கருதி சாவகச்சேரி பட்டினசபை அலுவலகத்திற்கு அருகில் ஒரு உப அலுவலகம் தற்காலிகமாக நாளை 16ஆம் திகதி முதல் இயங்கவுள்ளது.

எனவே தென்மராட்சியில் இடம்பெயர்ந்து வசிப்போர் அந்த உப அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். (இ)

## குறுகிய கால விவசாயப் பயிற்சி

உணவு பாதுகாத்தல், பாசாக்கு உணவு தயாரித்தல் ஆகிய ஒவ்வொரு துறைகளிலும் ஐந்து நாள் குறுகிய விவசாயப் பயிற்சி நெறி ஒன்றினை திருநெல்வேலியில் உள்ள மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தினர் நடத்தவுள்ளனர்.

இதில் பங்குபற்ற விரும்பும் பெண்கள் தமது விண்ணப்பத்தினை திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்துக்கு எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ)

### அதிகார பரவலாக்கல் யோசனையில்

# பாதுகாப்பு விவகாரம் மத்திய அரசின் கீழ் வரும்

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக் 16

"அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளின் படி பாதுகாப்பு விவகாரம் மத்திய அரசாங்கத்தின் கீழ் இயங்கும். வடக்கு-கிழக்கு பிராந்தியத்துக்கு தனியான பாதுகாப்பு ஒன்று கிடைக்க இடமில்லை"

மேற்கண்டவாறு அரசு அறிவித்துள்ளதாக "தினமின" பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

"புதிய யோசனைகளின் படி—காணி விவகாரத்தில் ஒரு பிராந்தியத்துக்கென காணிகள் ஒதுக்கப்படும் போது அக்காணிகள் அப்பிரதேச மக்களின் பாவனைக்கு உதவும். அதன் மூலம் பொருளாதாரம் வளரும் காணிகளைப் பிரித்து கொடுப்பதாகக் கூறுவதில் அர்த்தமில்லை.

கடல் எல்லைப் பிரதேசத்திம் 60 வீதம் வடக்கு-கிழக்குக்குச் செல்வதாக கூறுவதை ஏற்க முடியாது"

—இவ்வாறு அரசு தெரிவித்துள்ளது. [ஒ-3]

## அரிசி மூடையுடன் சைக்கிள் திருட்டு

தென்மராட்சி, ஒக். 16

அரிசி மூடையுடன் நின்ற சைக்கிள் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இடம்பெற்றது.

தெற்பலி மண்டிதர்குடியிருப்பைச் சேர்ந்த சி. ஓங்கார வடிவேலு என்பவரின் சைக்கிளே அரிசிமூடையுடன் திருட்டுப் போனது.

இத் திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி காவல்பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [ஐ-117]

# புலிகளின் கண்ணிகளால் படையினருக்கு அச்சுறுத்தல்

### இதுவரை 7 பவள்களை இழந்தனர்

கொழும்பு, ஒக். 16

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் அரச படையினர் கவச வாகனங்கள் மற்றும் டாங்கிகளைப் பயன்படுத்துவதில் பெரும் அச்சுறுத்தல்களை எதிர் நோக்குவதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

விடுதலைப் புலிகள் மிகவும் சக்தி வாய்ந்த கண்ணி வெடிகளைப் பயன்படுத்துகின்றனர்.

மீண்டும் யுத்தம் ஆரம்பித்த பின்னர் இதுவரை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஒரு டாங்கி, 7 பவள் கவச வாகனங்கள், 3 சலாடின் கவச வாகனங்கள், 2 டாக்டர் றோவர்கள், 2 புல்டோசர்கள் மற்றும் ஜீப்கள், டிறாக்குகள் என்பன தகர்க்கப்பட்டுள்ளன. [ஐ-எ]

# மாணவர் அறிவியல் கழக இவ்வார வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஒக் 16

மாணவர் அறிவியல் கழகம் நடத்தும் வாராந்த அறிவியல் வகுப்புகளின் தொடரில் இவ்வாரம் நடைபெறவுள்ள வகுப்புகளின் விபரம் வருமாறு:

*திங்கள்*

★ பி. ப. 3-00 மணியிலிருந்து 4-30 மணிவரை ஆண்டு 9 கணித செயன்முறை வகுப்பு

★ பி. ப. 3-30 மணியிலிருந்து 5-00 மணிவரை ஆண்டு 10 விஞ்ஞான செயன்முறை வகுப்பு

★ பி. ப. 5-00 மணியிலிருந்து 6-00 மணி வரை ஆங்கில வகுப்பு

*செவ்வாய்*

★ பி. ப 3-00 மணியிலிருந்து 4-00 மணிவரை ஆண்டு 9 விஞ்ஞான செயன்முறை வகுப்பு

★ பி ப 4-00 மணியிலிருந்து 5-30 மணிவரை ஆண்டு 7 கணித செயன்முறை வகுப்பு

*புதன்*

★ பி. ப. 3-00 மணியிலிருந்து 4-30 மணி வரை "அறிவியல் ஒளிப்படக்காட்சி"

★ பி. ப 4-30 மணியிலிருந்து 5-30 மணி வரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

*வியாழன்*

★ பி ப 3-00 மணியிலிருந்து 4-30 மணிவரை ஆண்டு 10 கணித செயன்முறை வகுப்பு

★ பி ப 3-30 மணியிலிருந்து 4-30 மணிவரை ஆண்டு 8 விஞ்ஞான செயன்முறை வகுப்பு

★ பி.ப 4-30 மணியிலிருந்து 5-30 மணிவரை ஆண்டு 8 கணித செயன்முறை வகுப்பு

*வெள்ளி*

★ பி.ப 3-00 மணியிலிருந்து 4-00 மணிவரை ஆண்டு 11 கணித செயன்முறை வகுப்பு

★ பி.ப 4-00 மணியிலிருந்து 5-30 மணிவரை ஆண்டு 11 விஞ்ஞான செயன்முறை வகுப்பு

*சனி*

★ மு.ப 9-30 மணியிலிருந்து 11-00 மணிவரை ஆண்டு 9 கணித செயன்முறை வகுப்பு

★ மு ப 11-00 மணியிலிருந்து 12-00 மணிவரை ஆண்டு 7 கணித செயன்முறை வகுப்பு

★ பி.ப 4-00 மணியிலிருந்து 5-30 மணிவரை ஆண்டு 9 விஞ்ஞான செயன்முறை வகுப்பு (ஜ)

# 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு ஒரே நாளில் போலியோ மருந்து

### ஏற்பாடுகள் துரிதமாக நடக்கின்றன

எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதியும், 9 ஆம் திகதியும் தேசிய நோய்த் தடுப்பு நாள்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

போலியோவை (இளம்பிள்ளைவாதத்தை) இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னராக ஒழித்துவிடும் சர்வதேச றோட்டறியின் திட்டத்தின் கீழ் இந்த இரு நாள்களிலும் ஐந்து வயதுக்கு உட்பட்ட சகல குழந்தைகளுக்கும் வாய் மூலமான போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படஉள்ளது.

இலங்கையின் சகல மாவட்டங்களிலும் இந்த இரு தினங்களிலும் போலியோ தடுப்பு மருந்து ஐந்து வயதுக்கு உட்பட்ட சகல குழந்தைகளுக்கும் வழங்கப்படும்.

இந்த போலியோ தடுப்பு இயக்கத்தை சர்வதேச றோட்டறிக்கழகத்துடன் இணைந்து யுனிசெப் மற்றும் உலக சுகாதார நிறுவனமும் சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக நடைமுறைப்படுத்துகின்றன.

ஐந்து வயதுக்கு [60 மாதங்கள்] உட்பட்ட சகல குழந்தைகளுக்கும் ஒரே நாளில் வாய் மூலமாக தடுப்பு மருந்தைக் கொடுப்பது என்ற இந்த மாபெரும் போலியோ தடுப்பு இயக்கத்தை யாழ்.மாவட்டத்திலும் வெற்றிகரமாக செயற்படுத்த விரிவான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன

யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்தச் சனத்தொகையில் பத்துச் சத வீதமானோர் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகள் ஆவர்.

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களமும், மற்றும் [illegible] சுகாதாரப் பகுதியினரும் இணைந்து இத்தகைய ஏற்பாடுகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சகல சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும், குடும்ப நல சேவையாளர் மட்டத்திலும் இதற்கென விசேடமாக குழுக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பெரும் எண்ணிக்கையான குழந்தைகளுக்கு ஒரே நாளில் மருந்து தடுப்பு வழங்கப்பட உள்ளதால் இப்பணியைச்செய்வதற்கெனத் தொண்டர்கள் பயிற்று விக்கப்பட்டு வருகின்றனர். கிராம, நகர மட்டத்தில் இதற்கான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. [அ-ஐ]

## பேராதனை பல்கலைக் கழகம் திறக்கப்படுகிறது

கொழும்பு, ஒக். 16

பேராதனைப் பல்கலைக் கழகம் நாளை 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்படும்.

விடுதிகளில் வசிக்கும் மாணவர்கள் இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு முன்னதாக தத்தம் விடுதிகளுக்கு திரும்ப வேண்டும் என்று பேராதனை பல்கலைக் கழக துணைவேந்தர் அறிவித்துள்ளார். (இ-4]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பழைய ஓடுகளும் பனை மரங்களும் விற்பனைக்கு உண்டு இல. 96, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (39022)

### சைக்கிள் விற்பனைக்கு

ஆண்களுக்கான நல்ல நிலையிலுள்ள சைக்கிள் விற்பனைக்கு உண்டு இல: 217/A ஆஸ்பத்திரி வீதி, [சிறீதரன் மரக்காலை முன்பாக] யாழ்ப்பாணம். (39026)

### வணிக புள்ளி விபரவியல்

வெளிவந்து விற்பனையாகின்றன A/L புதிய பாடத்திட்டத்திற்குரியது. ரூபா 250/-. யாழ்ப்பாண புத்தக நிலையம், 141. மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1739)

### தேவை

எமது புகைப்பட நிலையத்திற்கு வேலை பழகி, வேலை செய்ய இருப்பவரும் விண்ணப்பிக்கலாம். வெளிமாவட்டங்களில் இருந்தும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி செய்து தரப்படும். குழந்தைகள் புகைப்படக் கலையகம் (Children Photo) பல்கலைக்கழக சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. விண்ணப்ப முடிவு திகதி 6-11-95. (38993)

## சந்திரிகா கொடும்பாவி எரிப்பு

சாவகச்சேரி, ஒக் 15

சந்திரிகாவினதும் அனுருத்த ரத்வத்தையினதும் கொடும்பாவிகள் கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நுணாவில் சங்கத்தானை புளியடிச் சந்தி வழியாக பிரேதப் பெட்டி, தீப்பந்தங்கள், சகிதம் முரசு முழங்க ஒப்பு சொல்லி அழுகை ஒலிக்க வீதிவழியாக இழுத்துச் செல்லப்பட்டன.

இதனை வீதிகள் தோறும் மக்கள் குழுமிநின்று பார்வையிட்டனர். இறுதியாக கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன. (ஒ-31)

## 19 மீனவர்கள் கடத்தப்பட்டனர்

திருமலை மாவட்டத்தில் 19 மீனவர்களை இனந்தெரியாத நபர்கள் கடத்திச் சென்றுள்ளனர் என்று கொழும்பு சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

---

**D M I**
233, ஸ்ரான்லி வீதி யாழ்.
**96 DAY CLASS**
(பரீட்சை எடுத்தவர்களுக்கு)
**கணக்கியல்**
பிரிவு II
ஆரம்பம் 17-10-95
மதியம் 12 மணி
ஆசிரியர்
**D. SAM**
(39019)

---

## வணிகச்சோலை மலர் வெளியீடு

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் "வணிகச்சோலை" மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் பேராசிரியர் க. தேவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (எ 90)

---

# புதிய பேரடெனியா இன்ஸ்ரியூட்

கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.

## கலை, வர்த்தக வகுப்புகள் நடைபெறுகின்றன

**96** மீட்டல் வகுப்புகளும்
**97** ஆம் ஆண்டுக்கான வகுப்புகளும் நடைபெறுகின்றன

| | | |
|---|---|---|
| தமிழ் | — | எஸ். கணேசலிங்கம் |
| இந்து நாகரிகம் | — | இர. நித்தியானந்தன் |
| நாடகமும் அரங்கியலும் | — | க. சந்தவேல் |
| புவியியல் | — | S S. வாசன் |
| அரசியல் | — | ஐ. புவனேந்திரன் |

## வர்த்தக வகுப்புகள்

| | | |
|---|---|---|
| வர்த்தகம் | — | வரதன் |
| கணக்கியல் | — | சதீஸ் |
| பொருளியல் | — | பிரபல ஆசிரியர் |
| வணிகப் புள்ளி விபரவியல் | — | ஸ்ரனிஸ்லஸ் |
| அளவையியல் | — | சயந்தன் |

[சி-2481]

---

உ

## சபிண்டீகரண சிராத்த கிருஹயக்ஞ அழைப்பு

யுவ வருடம் புரட்டாதி திங்கள் 20ஆம் நாள் (07-10-95) சனிக்கிழமை மாலை சிவபதம் அடைந்த எங்கள் அன்புத் தாயார்

**திருமதி சாமிநாதஐயர் சரஸ்வதி அம்மா**

அவர்களின்

ஆத்ம சாந்தி கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

16 10-1995 திங்கட்கிழமை காலை 10மணி தசாகம்
17-10-1995 செவ்வாய்க்கிழமை காலை 10 மணி ஏகோதிஷ்டம், மாசியம்
18-10-1995 புதன்கிழமை காலை 10 மணி சபிண்டீகரணம்
19-10-1995 வியாழக்கிழமை நண்பகல் 12 மணி கிருஹயக்ஞம் (மதிய போசனம்)

இதில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காளி கோவிலடி
கோண்டாவில் மேற்கு.
[39025]

---

# யாழ். ஊர்திகள் நிலையம்

1995 — 09 — 01 ஆம் திகதியன்று ஆரம்பித்து வைக்கப்பட்ட

"யாழ். ஊர்திகள் நிலையம்"

யாழ். மக்களின் எல்லாவகையான வாகனங்களையும் வாகனச் சொந்தக்காரர்களின் நன்மை கருதிக் குறைந்த கட்டணங்களில் சுத்திகரிப்பு செய்ய ஆரம்பித்து உள்ளது. வாகன சுத்திகரிப்பு மட்டுமன்றி வாகன. மிதிவண்டி ரியூப் ஒட்டுதல், வால்க்கேனேஸ், பொலிசிங் வேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
யாழ். ஊர்திகள் நிலையம்,
இல. 50. இளங்கோ வீதி,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

(சி-2464)

---

வெளிவந்து விட்டது! முற்றிலும் புதிய அமைப்பில்

# அறிவுக்களஞ்சியம் - 34

✶ புதிய அளவு ✶ அதிக பக்கங்கள்
✶ அழகிய மேலட்டை

விலை ரூபா 15/-

(சி-1740)

---

# இடம்பெயர்ந்த மக்களுக்கு கெயர், றெட்பானா உதவி

தென்மராட்சி, ஒக். 16

இடிமுழக்க நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பிரிவில் உள்ள நலனோம்பு நிலையங்களில் உள்ள ஆயிரம் குடும்பங்களுக்கு கெயர் ஸ்தாபனம், பாய்கள், படுக்கை விரிப்புகள், தண்ணீர்க் குவளைகள், சாப்பாட்டு தட்டுகள் ஆகியவற்றை வழங்கவுள்ளது.

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயம், சாவகச்சேரி மகளிர் கல்லூரி கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய நலனோம்பு நிலையத்தில் உள்ளவர்களுக்கு இவை வழங்கப்படவுள்ளன.

அத்துடன் இந் நலனோம்பு நிலையங்களுக்கென 25 மலசலகூட உபகரணங்கள் 15 குடிநீர் பரல்கள், 75 பிளாஸ்ரிக் வாளிகளையும் கெயர் நிறுவனம் வழங்கவுள்ளது.

றெட்பானா உதவி

இதேவேளை—

றெட்பானா நிறுவனம் 350 படுக்கை விரிப்புகள், 150 கிலோ ஜீவாகாரம், 10 அலுமினியப்பாத்திரங்கள், 10 மண்வெட்டிகள், 10 திருகுபலகை ஆகியவற்றை வழங்க இருக்கிறது.

இவை மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா. மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ஒ- 117)

## சூரிய கிரகணம்

கொழும்பு, ஒக். 16

இம் மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை பூரண சூரிய கிரகணம் நிகழும். இது இலங்கையில் ஓரளவே தெரியுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கிறது

24ஆம் திகதி 7-44 மணிக்கு ஆரம்பமாகும் சூரிய கிரகணம் காலை 9-59 மணிக்கு முடிவடையும். இந்த வேளையில் பாதுகாப்பு சாதனங்கள் இன்றி சூரியனை நேரடியாக பார்ப்பதை தவிர்த்துக்கொள்ளும்படி ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம், ஆகிய மாநிலங்களின் சில பகுதிகளில் பூரண சூரிய கிரகணம் தென்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் வானொலியில்

**16 - 10 - 1995**
**திங்கள் இரவு**

★ 8-02 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — சமகாலப் பார்வை
★ 8-30 செய்திகள்
★ 8-40 — தரிசனம் - நிகழ்ச்சியில் ஒவியர் சிவப்பிரகாசத்துடனான செவ்வி

**17 - 10 - 1995**
**செவ்வாய் காலை**

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 8 00 — மணிவரை தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலியில்

**திங்கள் மாலை**

★ 5 01 — சிந்தனைச் சிதறல்
★ 5 02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5-30 — மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — எனி தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — நேயர் நெஞ்சம்

# குடும்பநல சேவையாளர் பரீட்சை அனுராதபுரத்தில்

சண்டிலிப்பாய், ஒக் 16

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தரம் II "ஆ" குடும்ப நல சேவையாளர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சையின் செயன் முறைப் பரீட்சை எதிர் வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் அனுராதபுரம் பிராந்திய சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது

இதற்கான அறிவித்தல் கொழும்பிலுள்ள சுகாதார திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக யாழ். சுகாதார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டில் மேற்படி பரீட்சையில் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய குடும்ப நல சேவையாளர்களுக்கே இந்த செயல் முறைப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இது பற்றிய முழு விபரங்களை யாழ் சுகாதாரபிரதி மாகாண பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

இப் பரீட்சைக்கு தோற்ற வதற்கு தகுதியான 50 பேரின் பெயர்ப் பட்டியலும் இங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (எ-135)

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி கண்மணி அப்பாத்துரை

தவறிவிட்ட எங்களை தத்தெடுத்த
குருகுமாரவேல்
அவர்தம் தாயாரின் மறைவிற்காய்
எங்கள் கண்ணீர் அஞ்சலி.

யாழ்/ பல்கலைக்கழக
வெளிவாரி இறுதியாண்டு
மாணவர்கள்,
புதிய உயர் கலைக்கல்லூரி.

(39028)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஐ. நாவுக்கு மகஜர்

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் படைகள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தும் போரினால் உண்டாகும் அழிவுகள், அவலங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

யாழ் பிரஜைகள் குழு, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இராணுவம் நடத்தும் அட்டூழியங்கள், அரசாங்கம் மேற்கொள்ளும் அக்கிரமங்கள் என்பன மிக விரிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள்மீது நடத்தப்படும் எறிகணைத் தாக்குதல்கள், குண்டுவீச்சுக்களினால் உண்டான உயிரழிவுகள் குறித்து சம்பவ ரீதியாக புள்ளிவிவரங்களோடு தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் வடபகுதி மீது விதித்துள்ள உணவுத் தடை, மற்றும் மருந்து, உரவகைகள் உட்பட்ட பொருளாதாரத் தடைகள் குறித்தும்—

அவற்றின் விளைவாக மக்களின் வாழ்க்கை மிகவும் மோசமான நிலையை எட்டி இருப்பது குறித்தும்— ஐ.நா.வுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா ஆட்சிக்கு வரும்போது இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பதே தமது கொள்கை என்று தெரிவித்திருந்தார்.

ஆகையால் பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறும் தமிழ் மக்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படும் பொருளாதாரத் தடையை நீக்குமாறும் ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு ஐ. நா சபைச் செயலாளரிடம் யாழ். பிரஜைகள் குழு கேட்டுள்ளது.

தமிழ் மக்களின் அழிவை நிறுத்தவோ அல்லது அவர்களின் கஷ்டங்களை நீக்கவோ சந்திரிகா அரசு அக்கறை கொள்வதாக இல்லை.

தமது படைகள் தமிழ் மக்களுக்கு உண்டாக்கும் அழிவுகளையும், அரசு கொடுக்கும் கஷ்டங்களையும் மறைக்கும் விதத்தில் பொய்ப் பிரசாரம் செய்து கொண்டு —

திட்டமிட்ட முறையில் தமிழர்களை ஒடுக்கி, நசுக்கி, வாட்டி வதைத்து வருகிறது சந்திரிகா அரசு.

தமிழர்கள் தமது இன்னல்கள் குறித்துத் தெரிவிக்கும் முறைப்பாடுகள், கோரிக்கைகள் யாவும் எருமை மாட்டின் மேல் பெய்த மழையாகவே இருக்கும்.

ஆகையால் தமிழர்கள் தமது அழிவுகளை, இன்னல்களைத் தடுக்குமாறு சர்வதேச சமூகத்தினைக் கேட்பதனைத் தவிர வேறு வழி இல்லை.

உண்மையை அறிந்து கொண்டால், சர்வதேச சமூகம் சந்திரிகாவின் அட்டகாசத்தைப் பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

இவ்விவகாரம் ஸ்ரீலங்கா அரசையும் தாண்டி மூன்றாமவர் கைக்கும் போகும் பொழுது, அதனால் பாதிக்கப்படப் போவது அரசாங்கமே என்பது நிச்சயம்.

ஆனாலது கொழும்பு அரசாங்கத்துக்கும் தமிழர்களுக்கும் இடையேயான தொடர்பும் உறவும் மிகப் பெரும் விரிசலைக் காணும்.

இதனை உணர்ந்து கொள்வதற்கு சந்திரிகாவின் போர் மயக்கம் கலையுமா என்பது சந்தேகமே. அந்த மயக்கம் கலையாவிடில் அது இந்த தேசத்தின் தற்கொலைக்கே வழி செய்யும்.

# ஆவரங்கால் வெளியில் மண் அணை அதன்மேல் படையினர் காவலரண்கள்

### தப்பி வந்த வயோதிபர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஒக். 16

ஆவரங்கால் வெளிப் பகுதியில் படையினர் மண் அணைகளை அமைத்து அதன் மீது காவரண்களை ஏற்படுத்தியுள்ளனர் என்றும்—

அஸ்பெஸ்டஸ் சீற்றுக்களைப் பயன்படுத்தி காவலரண்களுக்கு கூரைகளை அமைத்துள்ளனர் என்றும் — அச்சுவேலி கிழக்கு பகுதியில் இருந்து வந்த வயோதிபத் தம்பதியர் தெரிவித்தனர்.

படையினரிடம் சிக்கி பின்னர் தென்மராட்சி பகுதிக்கு வந்து சேர்ந்த இவர்கள் தமக்கு நேர்ந்த அனுபவம் குறித்து "உதயன்" செய்தியாளரிடம் தெரிவித்ததாவது:-

அச்சுவேலி வடக்கில் மகளுடன் வசித்து வந்த நாங்கள் கடந்த முதலாந் திகதி படையினரின் ஷெல் வீச்சுக்களையடுத்து மகளையும் பிள்ளைகளையும் அனுப்பிவிட்டு வீட்டில் தங்கியிருந்தோம். முன்னர் அடிக்கடி படையினரால் ஷெல் வீச்சு நடத்தப்பட்டு பின்னர் குறைந்து விடுவது வழக்கம்.

அன்றைய தினம் வழமையை விட ஷெல் வீச்சு அதிகரித்துக் காணப்பட்டது. அதனால் பிள்ளைகளை சாவகச்சேரிக்குப் போகுமாறு அனுப்பினோம். ஷெல்கள் அடுத்தடுத்து அச்சுவேலிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த போதிலும் எமது பகுதியில் ஓரிரண்டு ஷெல்கள் வெடித்ததால் நாங்கள் பயமின்றி அங்கு இருந்தோம். எமது பகுதியில் பதினைந்துக்கு மேற்பட்ட வயோதிபர்கள் இருந்தனர். எனவே நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து உணவு சமைத்துச் சாப்பிட்டோம்.

மூன்றாம் நாள் காலையில் எமது பகுதிக்கு தமிழில் கதைத்தபடி வந்த இராணுவத்தினர் எங்களை வீடுகளில் இருக்குமாறும் துப்பாக்கிச் சத்தம் கேட்டால் படுத்துக் கொள்ளுமாறும் தெரிவித்தனர்.

அன்றைய தினம் பிற்பகல் பெருமளவு ஆட்டுக் கடாக்களை கட்டி இழுத்து வந்த அவர்கள் எமது பட்டியில் நின்ற ஆட்டுக்கடாக்களையும் அவிழ்க்கச் சென்றனர் நாங்கள் அவற்றை விட்டு விடுமாறு கேட்டோம் அவர்கள் விட்டு விட்டுச் சென்றனர். தினமும் ஆட்டுக் கடாக்களை இழுத்துக் கொண்டு எமது ஒழுங்கையால் செல்லும் படையினர் எமது ஆடுகளையும் கொண்டு செல்லப் போவதாக மிரட்டுவர்.

கடந்த எட்டாம் திகதி காலை எமது வீட்டுக்கு வந்த இராணுவத்தினர் எங்களை அச்சுவேலி கன்னியர் மடத்திற்கு வருமாறு கூறிவிட்டுச் சென்றனர்.

நாங்கள் வீட்டிலிருந்த சில பொருட்களை எடுத்துக் கொண்டு வேறு ஒழுங்கைகளால் கப்புதூ பகுதியை நோக்கி நடந்தோம். எம்மை இடையில் கண்ட படையினர் எங்கு செல்கிறீர்கள் எனக் கேட்டனர். அந்த ஒழுங்கையால் அச்சுவேலி கொன்வென்றுக்கு போவதாகக் கூறிவிட்டு வயல் வெளியூடாக கப்புதூவை அடைந்து அங்கு கோயில் ஒன்றில் தங்கினோம். மறுநாள் சாவகச்சேரியில் உறவினர் வீட்டில் தங்கியுள்ள எமது பிள்ளைகளிடம் வந்து சேர்ந்தோம் — என்று தெரிவித்தனர்.

தாங்கள் ஒழுங்கைகளால் வந்த போது பெருமளவு மரங்கள் முறிந்து வீழ்ந்து காணப்பட்டதாகவும், வீடுகள் பல ஷெல்வீச்சினால் சேதமடைந்திருந்ததைக் கண்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

(ஐ-117)

## இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 16

வடபகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே கடமை புரிந்த ரயில்வே பகுதி உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் இம் மாதம் முதல் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை காலமும் இவர்களுக்கு அந்தந்த இடங்களில் கடமை புரிவதாகக் கருதி சம்பளம் வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

[ஒ-க-11]

## பிரதமர் நரசிம்மராவ் எழுதும் சுயசரிதை நாவல்

புதுடில்லி, ஒக். 16

"மறுபாதி" என்று பெயரிட்டு சுயசரிதை நாவல் ஒன்றை இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் எழுதி வருகிறார்.

74 வயதான ராவ் கடந்த 15 வருடங்களாக இது தொடர்பான வேலைகளில் தனது கையடக்கக் கம்பியூட்டருடன் ஈடுபட்டு வருகிறார்.

இந்த சுயசரிதை நாவலின் சில பகுதிகளை கடந்த புதன்கிழமை 'அவுட் லுக்' என்ற ஆங்கில வார இதழ் வெளியிட்டிருந்தது.

அரசியல், ஊழல் மற்றும் அதிகாரப் போட்டிகள் கொண்ட சுழியினுள், ஓர் இந்து உயர் குலத்தைச் சேர்ந்த படித்த பகுதி எவ்வாறு இழுத்து வரப்படுகிறது என்பது இதில் விவரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் பாலியல் வர்ணனைகளும் அதில் காணப்படுகின்றனவாம்.

1991 ஆம் ஆண்டில் பிரதமராக பதவியேற்றது முதல் இதுவரை ஒரேயொரு பத்திரிகையாளர் மாநாட்டை மட்டுமே நடத்திய, வசீகரமற்ற, சிந்தனை வயப்பட்ட ராவ் தொடர்பான புதிய ஓர் உண்மையை இந்த சுயசரிதை நாவல் வெளிப்படுத்துவதாக 'அவுட்லுக்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

[ஒ-எ

## தென் ஆபிரிக்கக் கலவரம் இவ்வாரத்தில் 122 பேர்பலி

தென் ஆபிரிக்காவின் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் ஆளும் ஆபிரிக்க தேசியக் கட்சியினருக்கும் ஸுலு இனத்தின் இன்காதா சுதந்திரக் கட்சியினருக்கும் இடையில் நீண்ட காலமாக நடந்து வரும் சண்டையினால் தென் ஆபிரிக்காவின் முக்கிய நகரங்களில் வன்முறைகள் நாளுக்கு நாள் பெருகி வருகின்றன.

தென் ஆபிரிக்காவின் இரு முக்கிய நகரங்களில் இந்த வாரம் நடைபெற்ற கலவரங்களினால் மட்டும் இதுவரை 122 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

(ஒ-எ]

## படித்த பிக்குமாருக்கு அமைச்சர் பதவி வழங்குக!

### ரத்னசார தேரோ கூறுகிறார்

கொழும்பு, ஒக். 16

அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகிக்கும் உயரதிகாரிகள் பலர் இன்று பொது நிர்வாகத்தை சீர்குலைக்கிறார்கள் எனவே நாட்டுக்கு விசுவாசமான படித்த பௌத்த பிக்குமாருக்கு அமைச்சர் பதவிகளை வழங்கி அமைச்சுக்களின் செயற்பாடுகளைத் துரிதமாக்குவது பொருத்தமானது என நான் எண்ணுகிறேன்.

— இவ்வாறு கூறுகிறார் தரமிட்டபொல ரத்னசார தேரோ.

அரசுக்கு ஓராண்டு காலம் பூர்த்தியடைந்தும் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை வடக்குக் கிழக்கில் நடைபெறும் யுத்தத்தினால் நாம் ஏனைய பிரச்சினைகளை மறந்து விடமுடியாது அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் [illegible] பிரச்சினைகள் பல உருவாகியுள்ளன என அந்தத் தேரோ மேலும் தெரிவித்துள்ளார்.

(ஒ-10)

## வேலை நிறுத்த முயற்சியை டாக்டர்கள் கைவிட்டனர்

கொழும்பு, ஒக். 16

அரசாங்க வைத்தியர்களின் மூன்று தொழிற் சங்கங்கள் இன்று தாம் ஆரம்பிக்கவிருந்த உத்தேச வேலை நிறுத்தத்தை கைவிட முடிவு செய்துள்ளன.

சுகாதார அமைச்சருடன் தொழிற்சங்க பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க மருத்துவ உத்தியோகஸ்தர் சங்கம், மருத்துவ நிபுணர்கள் சங்கம், அரசாங்க பல் வைத்தியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசியை அவரது இல்லத்தில் சந்தித்தனர்.

மருத்துவ தொழில் நுட்ப விநியோகப் பிரிவின் பதில் இயக்குநர் டாக்டர் அஜித் மென்டிஸ் சார்பில் மனு ஒன்று அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. [illegible] பரிசீலனை செய்த அமைச்சர் வேலை நிலுவைகளை செய்து முடிப்பதற்கு டாக்டர் மென்டிஸுக்கு 4 மாதகால அவகாசம் வழங்கியுள்ளார்.

அமைச்சர் வழங்கியுள்ள கால அவகாசத்துக்குள் டாக்டர் மென்டிஸ் தேங்கியிருக்கும் வேலைகளை பூர்த்தி செய்யத் தவறினால் இனிமேலும் அவர் சார்பில் வாதாடுவதில்லை என்று வைத்திய துறையைச் சேர்ந்த மூன்று தொழிற் சங்கங்களும் இணக்கம் தெரிவித்தன.

(அ-எ-3)

# ஓர் இனத்தை அழிக்கும் நோக்கிலே ஸ்ரீலங்கா அரசு யுத்தம் நடத்துகிறது

### நூல் வெளியீட்டு விழாவில் உரை

ஓர் அமைப்புக்கும் அரசுக்கும் அப்பாற்பட்டு, ஒட்டு மொத்தமாக ஓர் இனத்தை அழிக்கும் நோக்குடனேயே ஸ்ரீலங்கா அரசு இந்த யுத்தத்தை நடத்துகிறது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் "என்னுடையதும் அம்மாவினுடையதும்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

யாழ். இந்துக் கல்லூரிக் குமாரசாமி மண்டபத்தில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

திரு. புதுவை இரத்தினதுரை மேலும் கூறியதாவது:

இந்தப் போரில் எமக்கு உறுதுணையாக பொதுமக்கள் உதவுவது போன்று எழுத்தாளர்களும், கலைஞர்களும் பின் தளவேலைகளில் உதவுகிறார்கள். எந்து மண்ணில் இராணுவம் இழைக்கும் அனர்த்தங்கள் குறித்து சந்திரிகாவுக்கும் சர்வதேச உலகுக்கும் அவர்கள் செய்திகளை அனுப்பியுள்ளனர்.

கலை என்பது பிரசாரமல்ல. ஆனால் ஒரு போர் நிகழும் நாட்டில் அப்படி இருக்கமுடியாது. அந்த மண்ணின் படும் வேதனை வெப்பியத்தை மக்களுக்கு எடுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். உயர்ந்த உன்னத இலக்கியம் ஆறஅமர இருந்து படைக்க வேண்டியது ஏற்கிறோம்.

ஆனால் இந்தக் காலகட்டத்தில் [illegible] செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. உடனடியாகச் செய்வது மலினப்பட்டது என்றோ ஆற, அமர இருந்து எழுதுவது உயர்ந்தது என்றோ சொல்ல முடியாது. சிறந்த கலைஞனின் படைப்பு எந்த அவசரத்தில் எழுதினாலும் உயர்ந்ததாகவே இருக்கும்.

சிதம்பர திருச்செந்திநாதன் அடுத்த தலைமுறைக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான செய்திகளை சிறுகதை நாவல்களாக எழுதி வருகிறார்— இவ்வாறு அவர் கூறினார்.

மற்றும் பலர் உரையாற்றினர்.

கடுவில் பிரதேசச் செயலக திரு. ஆ. மகாலிங்கத்திடம் இருந்து பூபாலசிங்கம் புத்தக நிலைய உரிமையாளர் திரு. ராஜன் பூபாலசிங்கம் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

தமிழீழ கலை இலக்கியப் பேரவையின் சார்பில் வெளியீட்டு விழா நடைபெற்றது.

## மட்டு. நகருக்குள் மக்கள் செல்ல கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 16

மட்டக்களப்பு நகருக்குள் செல்வோரின் எண்ணிக்கை ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நகருக்குள் செல்லும் இருதரை வழிப்பாதைகளான புதிய பாலத்தடியால் செல்வோரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை மற்றைய வழியான கோட்டை முனைப் பாலத்தில் இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி பண்டிகையை

முன்னிட்டு

சகல விதமான புடைவைகளையும்
ஒரே இடத்தில் மலிவாக
பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்;

★ சிவகணேசன்
பட்டுச்சோலை

41, மேஜர் சோதியா தெரு,
யாழ்ப்பாணம். [பெரியகடை]

(சி-2482)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஆன்கிறேஸ் அலோசியஸ்
(சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆன்கிறேஸ் அலோசியஸ் 15-10-95 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அலோசியஸ் [இளைப்பாறிய ஆசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும், பற்றிமாராணி, ஜெனிற்றா நல்லையா (ப. நோ. கூட்டுறவுச்சங்கம், பண்டத்தரிப்பு), ஜெசிந்தா வனிதா, தேவதாஸ் (நில அளவைத் திணைக்களம், புத்தளம்), யஸ்ரீன் (இ. போ. ச. கோண்டாவில்), பற்றி தேவதாசன் [நியூஸ்லாந்து], யூட் கிறிஸ்ரி [புத்தளம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், அல்பிறெட் நல்லையா, யோகராணி விமலா, தேவதாசன் [நியூஸ்லாந்து] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லுடல் இன்று [16-10 95] திங்கட்கிழமை பி. ப. 3 மணியளவில் 387, பிரதான வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யஸ்ரின் (வேந்தன்)
[மகன்]

387, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [39024]

## தம்பிமுத்து பரராஜசிங்கம்
(பப்பா)

(முன்னாள் இளைப்பாறிய பரமேஸ்வராக்கல்லூரி ஆசிரியரும், வைத்தீஸ்வரா கல்லூரி உப அதிபரும்)

உடுவிலை பிறப்பிடமாகவும் 21, பி எம் சி ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் சிறிது காலம் வடக்கம்பரையில் வசித்தவருமாகிய தம்பிமுத்து பரராஜசிங்கம் அவர்கள் 14 - 10 - 95 அன்று சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பிமுத்து பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லத்துரையின் மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஸ்ரீராமச்சந்திரன் [கணக்காளர்], Dr கலைலாணி, சிவமலை, இராமநாதன் (பிரதிப்பணிப்பாளர், விவசாயத்திணைக்களம், திருகோணமலை), Dr புனிதவதி, Dr விசாகானந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் குணலோஜினி Dr. தியாகராஜா, காலஞ்சென்ற சற்குணம் (பொறியியலாளர்], சாந்தினி, Dr சிறீகணேஷன், செல்வமோகனா ஆகியோரின் மாமனாரும் திருமதி பரமேஸ்வரி சுந்தையா, காலஞ்சென்ற அரசரத்தினம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சுந்தையா, காலஞ்சென்ற ராமதாஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16 - 10 - 95) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள். ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

21, பி. எம், சி. ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (39028)

## வைரவப்பிள்ளை கந்தசாமி
(சாமியார்)

அச்சுவேலி தோப்பைப் சேர்ந்த வைரவப்பிள்ளை கந்தசாமி 09 - 10 - 1995 அன்று புத்தூரில் அகால மரணமானார்.

அன்னார் ஜானகியின் அன்புக் கணவரும், ரட்னேஸ்வரி, காலஞ்சென்ற சருணானந்தன் மற்றும் ஜெகதீஸ்வரி, ஞானநாதன், விஜயானந்தன் ஆகியோரின் தகப்பனாரும், ராசதுரையின் மாமனாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ஜெகதீஸ்வரி [ஜீவா]
(மகள்)
ஞானநாதன்
[மகன்]

இல. 11, பொற்பதி லேன்,
கொக்குவில் கிழக்கு. [39013]

# ரி. டி. எம் உரம் ஏற்றவும் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

கொழும்பில் பொருள் ஏற்றிக்கொண்டிருக்கும் "மாஹோர" கப்பலில் ஏற்றுவதற்காக எடுத்துச் செல்லப்பட்ட ரி. டி. எம். உரத்தை கப்பலில் ஏற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

வடக்கே உரம் எடுத்து வர அரசு தடை செய்திருந்த போதும் —

ஆயிரம் மெற்றிக்தொன் ரி.டி.எம் உரத்தை கப்பல் மூலம் வடக்கே எடுத்துச் செல்ல பாதுகாப்பு அமைச்சு முன்னர் அனுமதி வழங்கியிருந்தது. (உ-3)

# அராலி மக்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 16

சங்கானை வட்டத்தைச் சேர்ந்த — அராலி கிராம சேவையாளர் பிரிவில் — இதுவரை தேசிய மீட்பு நிதிக்கு ஒப்புதல் அளிக்காதோருக்கான கலந்துரையாடல் இன்றும், நாளையும் நடைபெறும்.

அராலி மேற்கு. அராலி மத்தியைச் சேர்ந்தோருக்கு இன்று காலை 8-30 மணி முதல் 5 மணி வரை ஞானியார் கோவில் மண்டபத்திலும் —

அராலி வடக்கைச் சேர்ந்தோருக்கு இன்று காலை 8 30 மணிமுதல் 5 மணி வரை அராலி இந்துக் கல்லூரியிலும் —

அராலி தெற்கு, அராலி கிழக்கைச் சேர்ந்தோருக்கு நாளை காலை 8-30 முதல் மாலை 5 மணிவரை கரைப்பிட்டி பிள்ளையார் கோவில் மண்டபத்திலும் — கலந்துரையாடல்கள் நடைபெறும் (உ-3)

## வலிகாமம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

(வயது 70) என்பவர் படுகாயமுற்றார்.

படையினரின் அகோர ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி சுழிபுரம், பொன்னாலை, பறாளை, தொல்புரம், வழக்கம்பரை, பண்ணாகம், பனிப்புலம், வடலியடைப்பு, சித்தன்கேணி, மூளாய் சங்கானை, தொட்டிலடிப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள்— ஆயிரக்கணக்கில் நேற்று இடம்பெயர்ந்தனர்.

இவர்கள் வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயில், சங்கரத்தை பத்திரகாளி அம்மன் கோவில், ஆனைக்கோட்டை பிள்ளையார் கோயில், மூத்தநயினார் கோயில் ஆகியவற்றிலும் ஆங்காங்கே மரநிழல்களின் கீழும் தங்கியிருந்ததை காண முடிந்தது.

நேற்று படையினர் நடத்திய ஷெல்தாக்குதல்களின் போது. ஷெல்கள் விழுந்து வெடித்த பகுதிகளில் இருந்து ஏற்கனவே மக்கள் இடம் பெயர்ந்திருந்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன எனினும் பல வீடுகள் கட்டடங்கள் சேதமடைந்தன.

(உ 3-13-15 68-175)

## மாதகலிலிருந்து...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகள் கடும் சமர் புரிந்தனர் என்றும் —

விடுதலைப் புலிகளின் இத்தாக்குதல் இராணுவத்தினருக்கு கணிசமான சேதத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என நம்பப்படுவதாகவும் —

"புலிகளின் குரல்" வானொலி அறிவித்தது.

சில்லாலை, பண்டத்தரிப்பு பகுதிகளை நோக்கி முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் ... தாக்குதல் நடத்தியதாக அறிய வந்தது. (உ-3 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்ப விபரங்கள் இரண்டொரு தினங்களில்!

கொழும்பு, ஒக். 16

தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் ஐயாயிரம் பேரை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட உள்ளன.

இது சம்பந்தமான விளம்பரங்கள் இன்னும் இரண்டொரு தினங்களில் பத்திரிகைகளில் வெளியிடப்படும் என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரானா தெரிவித்தார்.

வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சிங்கள மொழி மூல ஆசிரியர்கள் 7,000 பேர் நியமிக்கப்படுவர் என்றும் —

புதியஆசிரியர்களில்பௌத்த இந்து, இஸ்லாம் பாடங்களைக் கற்பிப்பதற்கென விசேடமாக குறிப்பிட்ட எண்ணிக்கையினர் நியமிக்கப்படுவர் என்றும் அமைச்சர் சொன்னார். [அ]

# வீரச்சாவு

## தங்கவேலாயுதம் தவராசா
[எழிலமுதன்]

கோப்பாய் தெற்கு, மடத்தடி இருபாலையைச் சேர்ந்த தங்கவேலாயுதம் - அன்னம்மா தம்பதிகளின் மகனாகிய தவராசா அவர்கள் வலிகாமம் கிழக்கில் இடம்பெற்ற இடிமுழக்கத் தாக்குதலின்போது வீரச்சாவடைந்தார்.

அன்னார் குகராசா, விஜயா, கோகிலவதி, ரேணுகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தி, ரமேஷ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதர்சினி, சுகன்ஜா, சுகிர்தா ஆகியோரின் சிறியதந்தையும், விஜிந்தனின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் அவரது இல்லத்தில் இன்று [16-10-95] நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. குகராசா
[சகோதரன்]

[39034]

# மரண அறிவித்தல்

## நாகலிங்கம் நடராஜா
(Retired Superintendent, Railways)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய புகையிரதப் பகுதி சுப்பிரின்ரென்டென்ட் நாகலிங்கம் நடராஜா 13-10 1995 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிமணி அம்மாவின் அன்புக் கணவரும், சசிதரன் [கணக்காளர், Burah Hathy), சசிகலா (விரிவுரையாளர் அக்குவினாஸ்), சசீந்திரன் [அபுதாபி), சசிகுமார் (ஹரிசன்ஸ் லிமிட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மல்லாகம் காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற தம்பிராஜா, காலஞ்சென்ற செல்லத்துரை, செல்லம்மா, தெய்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்;
ந. சசிதரன்
(மகன்)

"சோதிமணி வாசா",
சுதுமலை மத்தி,
மானிப்பாய். (39031)


# போலியோ!

அந்தப் பொல்லாத வியாதி
உங்கள் குழந்தைகளுக்கு
வராமல் தடுப்பதனை
நிச்சயப்படுத்திக்
கொள்ளுங்கள்

நவம்பர்
4ஆம் திகதியை
மறந்துவிடாதீர்கள்!


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.